# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

## பிரிவு 8 (2012 ம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 12)

## விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல், சரியான விடைகளை எழுதுதல்)

1. உலகத்தை படைத்தது யார்? இறைவன்
2. இறைவன் உலகை எத்தனை நாளில் படைத்தார்? 6 நாளில்
3. இறைவன் உலகத்தை படைத்த பின் எத்தனையாம் நாளில் ஓய்ந்திருந்தார்? 7 ம் நாளில்
4. படைப்பைப் பற்றி கூறும் நூல் எது? தொடக்கநூல்
5. படைப்பு வரலாற்றை ஒழுங்கு முறையில் தருக.( ஒழுங்கு முறையில் மனனம்செய்யவும்)
    1) 1ம் நாள் ஒளி,
    2) 2ம் நாள் வானமும் பூமியும்,
    3) 3ம் நாள் நிலமும், மரம் செடிகளும்,
    4) 4ம் நாள் சூரியன், சந்திரன், விண்மீன்
    5) 5ம் நாள் பறவைகளும், மீன்களும்
    6) 6ம் நாள் விலங்குகளும், மனிதனும்
    7) 7ம் நாள் ஓய்வு நாள்
6. படைப்புக்களில் உயர்ந்த படைப்பு யாது? மனிதன்
7. தாவீது எந்த ஊரைச் சேர்ந்தவர்? பெத்லேகேம்
8. மன்னன் சவுல் இறந்த பின்னர் இஸ்ராயேலரின் அரசர் யார்? தாவீது
9. குழந்தை இயேசுவை காணச்சென்ற மூன்று ஞானிகளின் பெயர்கள் என்ன? கஸ்பார், மெல்கியோர், பல்தசார்
10. எலியாவின் காலத்தில் பஞ்சம் உண்டானபோது அவர் யாரிடம் அனுப்பப்பட்டதாக இயேசு கூறினார்? சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்ணிடம்.
11. ஏராளமான மீன்களைக் கண்ட பேதுரு இயேசுவைப் பார்த்து என்ன கூறினார்? ஆண்டவரே நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்.
12. சாகக்கிடந்த பன்னிரு வயது நிரம்பிய சிறுமி யாருடைய மகள்? தொழுகைக் கூடத் தலைவரின் மகள்.
13. செக்கரியாவுக்கு திருக்கோவிலில் தூபப்பீடத்தின் வலப்புறத்தில் தோன்றியது யார்? ஆண்டவருடைய தூதர்
14. தாயின் வயிற்றில் இருக்கும்போதே யோவான் யாரால் ஆட்கொள்ளப்படுவார் என ஆண்டவரின் தூதன் கூறினார்? தூய ஆவியால்
15. இது எப்படி நிகழும் என்று மரியா கேட்டபோது வானதூதர் கூறிய பதில் என்ன? தூய ஆவி உம்மீது வரும், உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்
16. சீரிய நாட்டை யார் ஆண்டபோது குடிக்கணக்கு எடுக்கப்பட்டது? குரேனியு ஆண்டபோது
17. மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற சென்ற மரியாவும் யோசேப்பும் எதை பலியாகக் கொடுத்தனர்? இரு மாடாப்புறாக்கள் அல்லது குஞ்சுப்புறாக்கள்
18. பயணத்தால் களைப்புற்றிருந்த இயேசு அமர்ந்திருந்த கிணறு எந்த இடத்தில் உள்ளது? சமாரியாவில் உள்ள சிக்கார் என்னும் ஊரில்
19. பாலை நிலத்தில் இயேசு எத்தனை நாள்கள் இருந்தார் என்று, மாற்கு நற்செய்தியில் கூறப்பட்டுள்ளது? நாற்பது நாள்கள்
20. இயேசுவை எவ்வாறு சூழ்ச்சியாய்ப் பிடித்துக் கொலை செய்யலாம் என்று வழி தேடிக்கொண்டிருந்தவர்கள் யார், யார்? தலைமைக்குருக்களும், மறைநூல் அறிஞரும்
21. இம்மானுவேல் என்பதன் பொருள் என்ன? கடவுள் நம்முடன் இருக்கின்றார்.
22. ஞானிகள் வீட்டுக்குப்போய் எதைக் கண்டனர்? குழந்தையை அதன் தாய் வைத்திருப்பதைக் கண்டனர்.
23. யோசேப்பு எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக் கொண்டு இரவில் எங்கே சென்றார்? எகிப்திற்கு
24. ஏரோதிற்குப்பின் யூதேயாவை ஆட்சி செய்த அரசன் யார்? அர்க்கெலா

25. இயேசுவைக் கைது செய்தவர்கள் அவரை முதலில் யாரிடம் கூட்டிச் சென்றார்கள்? தலைமைக் குருவிடம்
26. யூபிலி ஆண்டு 2025ம் ஆண்டுக்கான தலைப்பு என்ன? நம்பிக்கையின் திருப்பயணிகள்
27. சென்ம பாவத்தை கழுவும் அருளடையாளம் எது? திருமுழுக்கு
28. பொதுக்குருத்துவத்தில் பங்கு பெறச்செய்யும் அருளடையாளம் எது? திருமுழுக்கு
29. திருமுழுக்கில் பயன்படும் பொருட்கள் எவை? தண்ணீர், மெழுகுதிரி, கிறிஸ்மா தைலம், வெண்ணிற ஆடை
30. திருமுழுக்கில் பயன்படும் வெண்ணிற ஆடையின் அர்த்தம் என்ன? தூய்மை
31. குணமளிக்கும் அருளடையாளங்கள் எத்தனை, அவை எவை? 2, ஒப்பரவு, நோயிற்பூசுதல்
32. மனம் வருந்துவதற்கான அருளடையாளம் எது? ஒப்புரவு
33. குருத்துவ அருளடையாளத்தை வழங்குபவர் யார்? ஆயர்
34. ஆயர்களை நியமிப்பவர் யார்? திருத்தந்தை
35. இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சென்ப பாவமில்லாது பிறந்த முதல் தாய் யார்? அன்னை மரியா
36. “ரபி“ நீர் எங்கே தங்கியிருக்கிறீர்” என்று இயேசுவிடம் கேட்டவர்கள் யார்? இயேசுவைப் பின்தொடர்ந்த யோவானின்சீடர் இருவர்.
37. மெசியாவைக் கண்டோம் என்று சீமோன் பேதுருவிடம் கூறிய அவரது சகோதரர் பெயர் என்ன? அந்திரேயா
38. அந்திரேயோ, பேதுரு இருவரும் எவ்வூரைச் சேர்ந்தவர்கள்? பெத்சாய்தா
39. பிலிப்பு எவ்வூரைச் சேர்ந்தவர்? பெத்சாய்தா
40. நத்தனியேலை இயேசுவிடம் அழைத்து வந்தவர் யார்? பிலிப்பு
41. “நசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ” என்று பிலிப்புவிடம் கேட்டவர் யார்? நத்தனியேல்
42. இரவில் இயேசுவிடம் வந்த யூதத்தலைவன் யார்? நிக்கோதேம்.
43. இயேசு எத்தனை வயதில் தமது பணி வாழ்வைத் தொடங்கினார்? 30
44. இயேசு எத்தனை வயதில் எருசலேம் தேவாலயத்தில் காணாமல் போனார்? 12
45. இயேசு எத்தனை வயதில் சிலுவைச் சாவை ஏற்றார்? 33
46. இயேசு தம் முதல் அருளடையாளத்தை எங்கு நிகழ்த்தினார்? கானாவூர் திருமணவீட்டில்
47. . இயேசு சிலுவை சுமந்து சென்ற போது அவரது முகத்தை வெண்துணியால் துடைத்தவர் யார்? வெரோணிக்கா
48. இயேசுவின் சிலுவையடியில் நின்றவர்கள் யார்? தாய் மரியாள், குலொப்பாவின் மனைவி மரியா, மகதலா மரியா, திருத்தூதர் யோவான்
49. இயேசுவைக் கைது செய்ய வந்த தலைமைக்குருவின் பணியாளரின் வலது காதை வெட்டியவர் யார்? புனித பேதுரு
50. புனித மாற்கு நற்செய்திக்குரிய அடையாளம் எது? சிங்கம்
51. புனித லூக்கா நற்செய்தியின் அடையாளம் எது? எருது
52. புனித யோவான் நற்செய்திக்கு வழங்கப்பட்ட அடையாளம் எது? கழுகு
53. பேதுரு என்பதன் பொருள் என்ன? பாறை
54. இயேசுவால் திரு அவையின் தலைமைப் பீடத்திற ்கு நியமிக்கப்பட்டவர் யார்? புனித பேதுரு
55. திரு அவையின் சிறப்பு பண ்புகள் எவை? ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்

## இடைவெளி நிரப்புக

1. “என் பின்னே வாருங்கள். ... உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் ” - **நான்** (மத்தேயு 4: 19)
2. “மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் ...உங்களை மன்னிப்பார்.» - தந்தையும் (மத்தேயு 6:14)
3. “நீ என்னைக் கண்டதால் நம்பினாய், ... நம்புவோர் பேறுபெற்றோர் ” -**காணாமல்** (யோவான் 20: 29)
4. “நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என .... உமக்குச் சொல்லுகின்றேன்” - **உறுதியாக** (லூக்கா 23:43)
5. “ தூய ... பெற்றுக்கொள்ளுங்கள் ” -**ஆவியைப்** (யோவான் 20: 22)

## பேச்சுப்போட்டி

## இயேசு கற்றுக் கொடுத்த செபம்

செபங்களில் மிகச்சிறந்த செபம் இயேசு கற்றுக்கொடுத்த செபம். ஏனெனில் இந்த செபத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் இயேசுவின் திரு வாயிலிருந்து மலர்ந்தவை. சீடர்கள் இயேசுவிடம், "எங்களுக்கு செபிக்க கற்றுக் கொடுங்கள்" என்று கேட்ட போது இயேசு, "நீங்கள் செபிக்கும் போது இவ்வாறு செபியுங்கள்" என்று கற்றுக்கொடுத்தார். இயேசு கற்பித்த செபத்தைக் கூற நேரம், காலம் தேவையில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் செபிக்கலாம். ஏனெனில் இந்தச் செபம் நாம் நம் தந்தையிடம் அன்புடன் பேசுவது போலவும், தேவைகளை கேட்டு பெற்றுக் கொள்வது போலவும் அமைந்துள்ளது. இந்த செபத்தை நாம் நம் அப்பாவிடம் பேசுகிறோம் என்ற உணர்வுடன் செபிக்க வேண்டும். இயேசு கற்பித்த செபத்தை ஒரு முறை சொல்லிப் பார்ப்போமே!

**விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே,**
**உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக,**
**உமது ஆட்சி வருக**
**உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல,**
**மண்ணுலகிலும் நிறைவேறுக**

**எங்கள் அன்றாட உணவை இன்று**
**எங்களுக்குத் தாரும்,**
**எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை**
**நாங்கள் மன்னிப்பது போல,**
**எங்கள் குற்றங்களை மன்னியும்,**
**எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்**
**தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.**

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

உறவை வளர்க்கும் விருந்தாக
பிறந்த வானின் அமுதே வா

செடியைப் பிரிந்த கொடியாக
மடிந்து அழிந்து போகாமல் - 2
இணைந்த கொடியாய் புவியினரை
அணைக்கும் இனிய விருந்தே வா

படர்ந்த இருளோ மறைந்துவிடும்
பருதி முகத்தைக் காண்பதனால் - 2
பாவிகளின் வாழ்வு முழுமை பெறும்
தேவன் உமது வருகையினால்

அழியா வாழ்வு விருந்தில் வரும்
பலியாய் விருந்தோ தொடர்ந்து வரும் - 2
குருவால் பலியோ தினம் தொடரும்
அருளால் வாழ்வு வளர்ந்து வரும்

## ஓவியப் போட்டிக்கான தலைப்பு

**பெந்தக்கோஸ்தே தினத்தில் தூய ஆவியாரின் வருகை**